www.padippakam.com

# அகதியான போது .................



--------------------------------------------------------------------------------ரஹீம்ராஜி

## ------(சமூக துரோகிகளை,அரசியல் வாதிகளின் உண்மை தோற்றத்தை அம்பலப்படுத்தும் புதிய தொடர் )----(This will be updated every Friday night)

பாகம் 2

அது 1990 ஜூலை மாதம் .இன்னமும் ஞாபகம் இருக்கிறது
யாழ்ப்பாணத்தில் இருந்து காடு வழியாக நாச்சிகுடா என்ற குக்கிராமத்துக்கு கேரதீவு படகு மூலம் வருவதற்கு லொறி பயண 'டிக்கெட் புக் ' பண்ண பல நாட்கள் காத்து இருக்க வேண்டியிருந்தது .
பல நாட்கள் காத்திருப்புக்கு பின்னர் ஒருவாறாக லொறி மூலமான பயணத்துக்கு இடமும் கிடைத்தது .எடுத்ததெல்லாம் இரு சூட்கேசுகள் மட்டும்தான் .அது ஆறு பேர் கொண்ட எனது குடும்பத்தின் ஆடைகளும் ,முக்கிய ஆவணங்களும் அடங்கிய பெட்டிகளாக இருந்தன
இடியோடு மழை பெய்த அந்த பொழுதுகள் எம் வாழ்க்கையில் மிகப்பெரிய இடியையும் பெரிய மாற்றத்தையும் ஏற்படுத்தும் என்று கனவிலும் அப்போது நினைத்து இருக்கவில்லை
பிற்பகல் ஒரு மணியளவில் பிரயாணம் ஆரம்பித்தது.மொத்தம் 75 தொடக்கம் 100 பேர் வரை அந்த வாகனத்தில் இருந்தோம்.புழுதி படிந்த காட்டின் ஊடான கேறவள் மண் மீதான பிரயாணம் அது .பயன்பாட்டில் இல்லாத வீதிகளாக இருந்ததால் மரத்தின் கிளைகளும்,செடி கொடிகளும் அந்த கேறவள் வீதியை மூடி இருந்தன.ஒருவாறாக மாலை 6 அல்லது 7 மணிக்கு நாச்சிகுடா எங்களை அன்புடன் வரவேற்றது
அந்த கிராமம் பற்றி சில வார்த்தைகளில் கூறுவதானால் மூன்று பக்கங்களும் பெருங்கடலால் சூழப்பட்ட மின்சாரமே இல்லாத சிறியதொரு முஸ்லீம் குக்கிராமம் . .யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லீம்கள் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்த காலங்களில் நாச்சிக்கிகுடா தற்காலிக தங்கும் இடமாக இருந்து வந்ததுடன் அங்குள்ள மக்கள் செய்த உதவிகள் அளவிட முடியாதது .மீன்பிடித்தொழிலை பிரதான தொழிலாக கொண்ட அந்த ஊர் மக்களின் உதவி செய்யும் உள்ளம் மறக்க முடியாதது .இயற்கையோடு இணைந்திருந்த அந்த நாச்சிக்குடாவில் அடுத்த பயணத்துக்கான லாரியை எதிர்பார்த்து மூன்று நாட்கள் வரை தங்கியிருக்க நேர்ந்தது .அந்த மூன்று நாட்களில் அந்த ஊரைச்சுற்றியுள்ள பெரும் பாலைப்பழ காட்டுக்கு சென்றபோது பூத்துக்குலுங்கிய பாலைபலங்கள் ,புலிகளால் கட்டப்பட்டிருந்து கை விடப்பட்டிருந்த பாதுகாப்பு அரண்கள்,பங்கர்கள் ,யானைகள் மற்றும் காட்டு மிருகங்கள் நடத்து சென்ற பாத அச்சுக்கள்,எச்சங்கள் மற்றும் காட்டினுள் வாழும் மக்கள் ஆகிய காட்சிகளை கண்டு கொண்டோம் .காட்டினுள் சென்ற போது இடம் மாறி விடுவோம் என்பதால் எங்களுக்காக

www.padippakam.com

அந்த ஊரைச்சேர்ந்த ஒருவரும் எங்களுடன் வந்திருந்தார் .வாழ்க்கையில் மறக்க முடியாத அந்த இனிய அனுபவங்கள் வாழ்கையை அந்த நேரத்தில் குதூகலிக்க வைத்த போதும் எதிர் வரும் துன்பப்புயல்கள் பற்றி அந்த நேரத்தில் கனவிலும் எதிர் பார்த்திருக்கவில்லை .

மூன்று நாட்களின் பின்னர் அடுத்த பயணம் ஆரம்பமாகியது .அதுவும் லாரி மூலமான பயணம் . .ஏற்கனவே செய்த பயணத்தை விட மிகவும் நெருக்கம் கூடியதாக இருந்த அந்த பயணத்தின் போது இடம் போதாமையால் லாரிகளுக்கு மேல் இளைஞர்களும் லாரிகளுக்கு உள்ளே பெண்களும் ,சிறுவர்களும் ,வயதான ஆண்களும் இருந்தனர் .எனக்கும் லாரிக்கு மேலே பயணம் செய்ய ஆசையாக் இருந்த போதும் சிறுவனாக இருந்ததால் தூரதிஷ்ட வசாமாக உள்ளி தள்ளப்பட்டேன் . ஆனாலும் அது அதிஷ்ட வசம் என்று பின்னர் தெரிய வந்தது .
முதல் செய்த பயணத்தை விட மிகவும் பயங்கரமானதாக இந்த பிரயாணம் இருந்தது . அடர்ந்த காட்டினூடான, புலிகள் மாத்திரம் பயன்படுத்திய பள்ளம் புட்டிகள் நிறைந்த ஒற்றை கெறவள் பாதையினூடான அந்த பிரயாணம் மிகவும் அபாயகரமானதாக இருந்தது .லாரியின் மேலே இருத் இளைஞர்கள் ஒவ்வொரு அடர்ந்த மரக்கிளைகள் வரும் போதும் லாரியின் மேல் தளத்தோடு சேர்த்தால்ப்போல் சாய்ந்து கொண்டார்கள் . பாதைகள் பயன்பாட்டில் இல்லாதமையால் அடர்ந்து
வளர்ந்திருந்த மரக்கிளைகளால் பல இளைஞர்கள் காயப்பட்டனர் .பயங்கரமான அந்த பயணத்தின் போது வான் ஊடாக எமது லாரி நோட்டமிடப்பட்டால் விமானம் மூலமாகவும் ஹெலிகொப்டர் மூலமாகவும் இலங்கை இராணுவத்தால் தாக்கப்படும் அபாயம் இருந்தது .முஸ்லீம்களை ஏற்றி வந்த பல லாரிகள் தாக்கப்பட்ட சம்பவங்களும் ,தாக்கப்பட்டபோது முலீம்கள் வெள்ளை துணிகளை உயர்த்திக்காட்டிய சம்பவங்களும் இடைக்கிடையே நடந்து வந்தன .
காட்டின் ஊடான,தூசு நிறைந்த அந்த பயம் தொடக்கி ஓரிரு மணி நேரத்தில் எமது லோர்ரி ஆயுதம் தாங்கிய புலிகளால் ஒரு
குக்கிராமம் ஒன்றை கடக்கும் போது நிறுத்தப்பட்டது .ஆயுதம் தாங்கிய புலிகள் லாரியின் உள்ளே வந்து நோட்டமிட்டனர். விசாரிக்கப்பட்டோம்.விசாரணையின் பின்னர் 'நெருப்பு " "எரிமலை 'போன்ற புலிகளின் சஞ்சிகைகளை வாங்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டோம். குறிப்பிட்ட தொகை சஞ்சிகைகள் வாங்குமாறு கூறப்பட்டோம். அங்கு சந்திகளில் கூடி புலிகளோடு சேர்ந்து இருந்த ஊர் மக்கள் எம்மை நையாண்டி பண்ணி 'காக்கா மாறே அஷ்ரப் எல்லாம் தருவார் அங்கெ போங்க' 'திருப்பி தமிழீழம் வராதீங்கோ' 'இது தமிழ் ஈழம்' 'இனிமேல் உங்களுக்கு இடம்இல்லை' என்று கூறி கூக்குரல் இட்டகாட்சிகள் இன்னமும் உள்ளத்தில் காயாத வடுவாக....
யாழ்ப்பாணத்தில் சிறுவனாக பாடசாலைகளில் இருந்த போது இந்திய ராணுவத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 'வெளிநாட்டு படைகளே வெளியேறு "அடிமையாக வாழ்வதை விட போராடிச்சாவதே மேல் ' என்று யாழ்பாண கோட்டைக்கு முன் ஆர்பாட்டம் செய்த போதும் ,எனது நண்பர்களுடம் ஆமி -புலி யுத்த விளையாட்டு விளையாடியபோதும் , இலங்கை இராணுவ ஹெலிஹோப்டேர்கள் ,விமானக்கள் மீது புலிகள் தாக்கும்போது அந்த ஹெலிகொப்டேர்களில் ,விமானங்களில் புலிகளின் குண்டுகள் படாதா என்று ஏங்கிய போதும் புலிகளுக்கு அளித்த மானசீகமான ஆதரவுக்கு கிடைத்த முதல் அடி அது .அப்போது என்னை நினைத்து நானே வெட்கப்பட்டுக்கொண்டேன் . யாழ்ப்பாண தமிழர்களுடன் பழகி இருந்த போதும் அப்போது நேரடியாக இவ்வாறு தாக்கப்படவில்லை .
பிரயாணத்தின் இடையில் ஒரு குக்கிராமத்தில் லாரி களைப்பு தீர்க்க நிறுத்தப்பட்டது . அங்கு இறங்கி எமது கை கால்களை கழுவிய போது ,முகத்திலும் கைகளிலும் இருந்து செந்நிற கேறவள் தூசுகள் தண்ணீரை நிறைத்தது . எமது கரு முடிகள் செந்நிற முடிகளாக ஆகி இருந்தமை அவதானிக்க முடிந்தது .
மீண்டும் பிரயாணம் ஆரம்பமானது .. மிக நீண்ட பிரயாணத்தின் பின்னர் மாலை 6 மணி நேரத்தை தொட்டு இருந்தது .அப்போது எமது லாரி எல்லையோர சிங்கள கிராமம் ஒன்றனுள் பிரவேசித்த போது பௌத்த பன்சலை ஒன்றில் ஓதும் பனூ காற்றை

படிப்பகம்

www.padippakam.com

நிரப்பிக்கொண்டிருந்தது . அதை தாண்டிய போது இலங்கை இராணுவத்தின் விசாரனைக்காவல் அரண்களை எதிர் நோக்கினோம் . அவை முடிந்த பின்னர் வழிவழியே பல இராணுவ சோதனைச்சாவடிகள் பலவற்றை கடந்து மதவாச்சியை அடைந்தோம் அப்போது அந்த நாள் இரவைதொட்டு இருந்தது .மதவாச்சிகளில் பல குடும்பங்கள் இறங்கின ..அங்கிருந்து இக்கிரிகொல்லாவ என்ற அனுராதபுர மாவட்டத்தில் உள்ள குக்கிராமம் ஒன்றுக்கு அன்று இரவே பயணம் செய்தோம்......... (தொடரும் )

படிப்பகம்